20th August 1960]

SRI P. G. MANICKAM : ஸார், மேஜை மீது வைக்கப் பட்டிருக்கும் குறிப்பில் 1960-ம் ஆண்டில் அரசாங்க ஸ்காலர் ஷிப் பெற்றவர்கள் 27 ஆண்களும், 9 பெண்களும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த அரசாங்கத்தினுடைய பணத்தைத்தான் வைத்தியப்படிப்புக்காகக் கொடுத்திருக்கிறோம். ஆகவே இவர்கள் தேச சேவை செய்ய முன் வரக்கூடாதா ? இவர்கள் எல்லாம் தேச சேவை செய்ய முன் வரவேண்டும் என்று அரசாங்கம் அழைப்பு அனுப்புமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் ஒரு நிர்ப்பந்த மான ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. இதை ஸ்காலர்ஷிப் கொடுக்கும்போது செய்ய வேண்டும். இந்த நிபந்தனையைக் கொண்டு வரலாமா என்பது பற்றி ஆலோசனை நடந்து கொண்டி ருக்கிறது.

Drainage facilities for certain lands

* 348 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மன்னார்குடி தாலுக்கா தென்கரை கிராம வாசிகளிடமிருந்து திருமேனியாறு பாயும் நிலங்களுக்கு வடிகால் வசதி கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்ததா ?

(ஆ) அப்படியாயின் அதன்பேரில் அரசாங்கம் எடுத்த நட வடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) A representation was received by the Executive Engineer, Grand Anicut Canals Division, in April 1958, from the villagers of Thenparai.

(ஆ) It is reported that the channel requires widening and strengthening of banks involving land acquisition. The improvement work will be taken up under Special Minor Irrigation Programme.

SRI A. VEDARATHNAM : ஸார், தஞ்சை ஜில்லாவில் இந்த கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற எல்லா கிராமங் களிலும் மழை காலம் வரும்போது கிராமங்களில் எல்லாம் தண்ணீர் வந்து நிரம்பி விடுகிறது. அதே சமயத்தில் காவேரியில் தண்ணீர் விடும்போதும் அதிகமாக தண்ணீர் வந்து வீடுகள் எல்லாம் தண்ணீரில் மூழ்கிவிடுகின்றன. இதைப்பற்றி நூற்றுக் கணக்கான மகஜர்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. ஆகவே இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வடிகால் வசதியைப் பெருக்க அரசாங்கம் உடனடியாக ஏதாவது முயற்சி செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : உண்மையிலே கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற மாதிரி பல கிராமங்களும், நிலங்களும் பாதிக்கப்படுகின்றன. இதைப்பற்றி நான் அங்கு சென்றிருந்த

போது நேரில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, இதை மைனர் இரிகேஷன் ஸ்கீமோடு சேர்த்து நல்ல முறையில் வடிகால்களை எல்லாம் ரிப்பேர் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

Houses for the residents of Javadhu Hills

* 349 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் போளூர் தாலுகா ஜவ்வாது மலைவாசிகளுக்கு எத்தனை வீடுகள் கட்டித்தரப்படும்?

(ஆ) 1958, 1959 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டன?

(இ) இல்லையாயின் காரணமென்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) The programme has not yet been finalised.

(ஆ) and (இ) No house was constructed for the hill tribes in the Javadhu Hills of Polur taluk during 1958–59 in view of the limited funds allotted for the scheme.

SRI S. M. ANNAMALAI : ஸார், மலைவாசிகளுக்காக பணங்கள் ஒதுக்கப்பட்டும் செங்கம் தாலுகாவுக்கும் திருப்பத்தூர் தாலுகாவுக்கும் இந்த வசதி செய்யப்படுகிறதே தவிர போளூர் தாலுகாவைப்பற்றி கவனிப்பதே இல்லை. இம்மாதிரி காரியங்களில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிப்பதே கிடையாது. ஒதுக்கப்படுகின்ற பணங்கள் எல்லாம் எல்லா தாலுகாக்களுக்கும் சரிசமமாகக் கொடுப்பதற்குரிய வகையில் சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே இந்த சபையில் சொல்லியிருக்கிறார்கள். போளூர் தாலுகாவில் போதிய வீடுகள் கட்டப்படவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து அங்கே வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக எம்.எல்.ஏ.-க்கள், எம்.எல்.ஸி-க்கள் இவர்களை எல்லாம் கலந்துதான் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

Parambikulam and Cauvery river waters

* 350 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம், காவிரி ஆறுகளின் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி ஏப்ரல் மாதம் நடந்த தென் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா?